

நெல்லை மாவட்டம் மேலநத்தம் பகுதியில் தாமிரபரணி ஆற்றில் காணப்படும் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், முன்னாள் அமைச்சர் மைதீன்கான் ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.



மதுரை மாவட்டம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, மேற்கு ஊராட்சி ஒன்றியம் கோவில்பாப்பாக்குடி ஊராட்சியில் 40 இடங்களில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பேவர் பிளாக் மற்றும் கழிவுநீர் வாய்க்கால் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி தொடங்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் மோனிகா ராணா, கழக நிர்வாகிகள் தனச்செல்வம், ஜி.பி.ராஜா, ஆர்.கே.ஜெயராமன், ராஜாமணி மற்றும் அலுவலர்கள் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

# கள்ளக்கூட்டணியைக் காப்பாற்ற இரட்டை வேடம் போடும் அ.தி.மு.க.!

## சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பதிலடி!

சென்னை, மார்ச். 7-

தனது கள்ளக் கூட்டணியைக் காப்பாற்ற இரட்டை வேடம் போடுகிறது அ.தி.மு.க. என சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தொகுதி மறுசீரமைப்பின் பெயரால் தமிழ்நாட்டிற்கு ஏற்படப்போகும் பேராபத்தை உணர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் நடத்திய அனைத்துக் கட்சிகூட்டம் மிகப்பெரிய வெற்றியை பெற்றிருக்கிறது.

கட்சி வேறுபாடுகளைத் தாண்டி தமிழ்நாட்டின் ஒற்றுமைக்குரலை வெளிப்படுத்த வேண்டும் எனும் முனைப்போடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.



தமிழர்களுக்கு எதிரியான பா.ஜ.க.வும் அதன் எடுபிடிகள் சிலரையும் தவிர அனைவரும் பங்கெடுத்து முதலமைச்சரின் முன்னெடுப்பிற்கு ஆதரவு கொடுத்துள்ளனர்.

அ.தி.மு.க.வும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு கொடுத்தது, ஆனால் செய்தியாளர்களை சந்தித்த ஜெயக்குமார் தி.மு.க. நாடகம் நடத்துகிறது என மாற்றிப் பேசுகிறார்.

தனது கள்ளக்கூட்டாளி பா.ஜ.க.வுடன் இணைந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அடகுவைத்து அடிமை ஆட்சி நடத்திய அ.தி.மு.க. இதனை சொல்வதற்கு எதாவது தகுதியிருக்கிறதா?

அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கெடுக்காமல் போனால் தமிழ்நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டு விடுவோமோ எனும் அச்சத்தில் கூட்டத்தில் கலந்து கொண்டு அ.தி.மு.க. நாடகம் நடத்தியிருக்கின்றது, என்பதையே ஜெயக்குமாரின் பேச்சு காட்டுகிறது.

பா.ஜ.க.வுடன் இணைந்து நீங்கள் நடத்தும் கபட நாடகம் என்றைக்கும் வெற்றி பெற போவதில்லை, உங்களைப் போன்ற அடிமைகளை மக்கள் நம்ப போவதுமில்லை.

முதலமைச்சரின் தலைமையில் தமிழ்நாடு போராடும், தனது உரிமையை வெல்லும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்புரை!

# தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தென்காசி.மார்ச்.7

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் இன்று 7ம் தேதி மாலை 5 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில்நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார் என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது-

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.செயற்குழு கூட்டம் இன்று (7ம் தேதி வெள்ளிக் கிழமை) மாலை 5 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

ஆகவே தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட ,நிர்வாகிகள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## நெல்லை மாவட்டம் – மேலநத்தம் பகுதியில் சாலை விரிவாக்கப் பணி –

# தாமிரபரணி ஆற்றில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றும் பணி!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தனர்!

*நெல்லை.மார்ச்.7*

நெல்லை மாவட்டம் மேலநத்தம் பகுதியில் தாமிரபரணி ஆற்றில் காணப்படும் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகளையும், சாலை விரிவாக்கப் பணிகளையும் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் துவக்கி வைத்தனர்.

வற்றாத ஜீவநதிகளில் ஒன்றான தாமிரபரணி நதி கடந்த சில ஆண்டுகளாக பொலிவிழந்து காணப்பட்டு வருகிறது.நதியை தூய்மைப்படுத்த பல்வேறு தரப்பினரும் தொடர் கோரிக்கையை வைத்து வந்தனர்.நீதிமன்றத்திலும் இது தொடர்பான வழக்கு இருந்து.

இந்த நிலையில் நெல்லை மாவட்ட நிர்வாகம் நம் தாமிரபரணி தொண்டு அமைப்புடன் மாவட்டத்தில் உள்ள பெரிய நிறுவனங்களில் சி.எஸ்.ஆர் நிதி உதவியுடன் தாமிரபரணி நதியை தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.முதல் கட்டமாக நாராயணமாள்புரம் முதல் குறுக்குதுறை வரை சுமார் 14 கிலோ மீட்டர் தொலைவுள்ள தாமிரபரணி நதி கரைகளை தூய்மைப் படுத்தி நீர் கருவை மரம் உள்ளிட்ட மாசு ஏற்படுத்தும் மரங்களை அகற்றி கரைகளை பலப்படுத்தும் விதமான மரங்களை நடவு செய்து பராமரித்து வருகிறது.

இந்த நிலையில் நம் தாமிரபரணி அமைப்புடன் மாவட்ட நிர்வாகம் இணைந்து கோமட்ஸ் மற்றும் எக்ஸ்னோரா நிறுவனங்களின் சி. எஸ்.ஆர்.நிதியுதவியுடன் இரண்டாம் கட்டமாக மேலநத்தம் முதல் தருவை வரையிலான தாமிரபரணி நதி தூய்மைப்படுத்தும் பணி நடத்தத் திட்டமிடப்பட்டு அதற்கான தொடக்க விழா மாவட்ட ஆட்சியர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது.இதில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று தூய்மைப் படுத்தும் பணிகளை துவக்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நதி கரைகள் சுத்தம் செய்யும் பணி தொடங்கியது இரண்டாம் கட்டமாக நடக்கும் இந்த பணிகளில் 14 கிலோமீட்டர் தொலைவில் நீர் மருது நாவல் வாகை சரங்குன்றை போன்ற வகைகளைச் சேர்ந்த 1750 மரங்கள் நடவு செய்து கரைகளில் உள்ள நீர் கருவை உள்ளிட்ட மாசு ஏற்படுத்தும் மரங்களை அகற்றி சுத்தம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பணிகள் சுமார் 30 நாட்களுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை மேட்டுத்திடல் ரவுண்டான முதல் பாளையங்கோட்டை தீயணைப்பு நிலையம் வரையிலான 1.2 கிலோமீட்டர் தொலைவிலான சாலையை ரூபாய் 3 கோடி மதிப்பில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் விரிவாக்கம் செய்யும் பணியையும் துவக்கி வைத்தனர்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல் வகாப் எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான்,மேயர் ராமகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி தலைவர் வி.எஸ். ஆர். ஜெகதீஷ், துணை மேயர் ராஜூ,தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன்,மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட விவசாய அணி தலைவர் இ.நடராஜன், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.





